[illegible]
சந்தா விகிதம்

தனிப்பிரதி 7 காசுகள்
[முன்பணமாக]
[இந்திய சந்தா விகிதம்]

		ரூ. காசு.
1 மாதம்	...	2—15
3 மாதம்	...	6—25
6 மாதம்	...	12—00
1 ஆண்டு	...	24—00

வெளிநாடு
ஆண்டு ரூ. 3[illegible]—0

①

Phone No: 86977
REGD. No: M 4780

விடுதலை

ESTD: 1935
திராவிட [illegible]

மலர் 4 || சென்னை: சுபகிருது ஆனி மீ 17௳ (1—7—62) ஞாயிறு ✱ வெளியூர் சுபகிருது ஆனி மீ 18௳ (2—7—62) திங்கள் விலை 7 காசுகள் | இதழ் 26

பெரியார் பொன்மொழி

"இந்த நாட்டில் உண்மையிலேயே ஒருமனிதன் பொதுத் தொண்டாற்றவேண்டும் என்று கருதுவானேயானால் அவன் முதலாவதாகச் செய்யவேண்டிய முக்கிய தொண்டு சாதியை ஒழிக்கப் பாடுபடுவதும், மக்களின் இழிநிலையையும், மடமையையும் ஒழிக்கப் பாடுபடுவதேயாகும்"

தகுதியுள்ள எல்லா ஏழை மாணவர்கட்கும் மேல்படிப்புக்கு வட்டியில்லாக் கடன்

தொழில்கல்விப் படிப்புக்கு அதிகம் செலவாவதால் அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது

பணமில்லாக்குறையால் படிப்புப்பாதிக்கப்படாமலிருக்க ஏற்பாடு

தமிழ்நாட்டுக் கல்வியமைச்சர் அறிவிப்பு

சென்னை ஜூலை, 1—

ஏழைப் பிள்ளைகள் கல்லூரிகளில் தொழில் படிப்புக்காக ஏராளமான பணம் செலவழிக்கவேண்டியிருப்பதால் பணமின்மைக் காரணத்தால் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படக்கூடாதென்பதை தமிழ்நாட்டு அரசாங்கம் உணர்ந்து கருணையோடு அவர்களுக்கு வட்டியில்லாக்கடன் உதவியளிக்க முன்வந்துள்ளது.

முன்பு அரசாங்க ஊழியர் பிள்ளைகளுக்கும் ஆசிரியர் பிள்ளைகட்கும் தருவதாக இருந்த இந்த அரசாங்க பண உதவி தற்பொழுது சராசரி கல்வி தகுதிக்கு மேலுள்ள எல்லா ஏழை மாணவர்கட்கும் தருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிப் படிப்புவரை வருமான அடிப்படையில் இலவசக் கல்விபெற முன்பு ரூ 1200 ஆண்டு வருமானமுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு மட்டும் என்றிருந்ததையும் மாற்றி ரூ 1500 ஆண்டு வருமானமுள்ள பெற்றோர்களின் பிள்ளைகட்கும் இலவசக் கல்வியளிக்கதமிழ்நாட்டு அரசாங்கம் முன்வந்துள்ளது.

தொழில் கல்வி கற்பதற்கு அதிகம் செலவழிக்க வேண்டியிருப்பதால் தமிழ்நாட்டு அரசாங்கம் எல்லா ஏழை மாணவர்களுக்கும் பணஉதவி செய்ய முன்வந்துள்ளது என்று கல்வியமைச்சர் பக்தவத்சலம் தமிழ்நாட்டு வரவு-செலவு திட்டத்தை வெளியிடுகையில் அறிவித்துள்ளார்.

அதன்படி சராசரி கல்வித் தகுதிக்கு மேலுள்ள எல்லா ஏழை மாணவர்களுக்கும் வட்டியில்லாக்கடன் அளிப்பதென அரசாங்கம் உத்தேசித்துள்ளதென்று அமைச்சர் தெரிவித்தார்.

அண்மையில் அரசாங்க கெஜடட் பதவியில்லா ஊழியர்களின் பிள்ளைகட்கும் ஆசிரியர்களின் பிள்ளைகட்கும் வட்டியில்லாக் கடன் மூலம் பணவுதவி செய்ய ஒரு திட்டம் கொண்டுவர உத்தேசித்திருக்கிறது. ஆனால் இப்பொழுது இத்திட்டம் மற்ற ஏழை மாணவர்களுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த வட்டியில்லாக்கடன் சொந்த ஜாமின் பேரிலேயே கொடுக்கப்படுமென்றும் மாணவர்கள் தங்கள் படிப்பை முடித்த பிறகு இக்கடனைத் திருப்பித்தரலாமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

உயர்நிலைப்பள்ளிப் படிப்புவரை இலவசக்கல்வி பெற்றோர்களின் வருமான அடிப்படையில் பெறுவதற்கான பிள்ளைகளுக்கும் அரசாங்கம் வருமான அடிப்படையை மாற்றி வசதி செய்துள்ளது.

முன்பு ஆண்டுக்கு ரூ 1200 வருமானம் பெறும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கே இலவசப்படிப்பு அளிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது ரூ 1,500 வருமானம் பெறும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் இலவசப்படிப்பு அளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

விவசாயிகளுக்கு பொறுக்கு விதைகள் வழங்க ஏற்பாடு

ரூ. 230 லட்சத்தில் இந்திய அரசாங்கத் திட்டம்

அமெரிக்காவும் உதவ முன்வருகை

புதுடில்லி, ஜூலை, 1—

விவசாயிகளுக்குப் நல்ல தரமுள்ள விதைகளை போதிய அளவுக்கு ஒழுங்காகத் தருவதற்குரிய திட்டமொன்றை ரூ. 230 லட்சம் அளவில் இந்திய அரசாங்கம் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் இயக்கத்தின் ஒரு பகுதியாகும்.

இந்திட்டத்திற்கு அமெரிக்க உதவிக்கழகம் ராக்பெல்லர்போர்டு நிறுவனங்கள் உதவும் என்று தெரியவருகிறது.

மற்றும் விதை உற்பத்திக்கான திட்டத்திற்கு ரூ. 84 லட்ச பெறுமான இயந்திர சாதனங்களை [illegible]

சர்ச்சிலுக்கு முறிந்த எலும்பு ஒட்டவைக்கப்பட்டது

அறுவை சிகிச்சை வெற்றிகரமாயிற்று

லண்டன், ஜூலை, 1—

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் சர். வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு இங்கு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அவருடைய முறிந்த தொடை எலும்பு வெற்றிகரமான முறையில் ஒட்டவைக்கப்பட்டது.

சர். வின்ஸ்டன் சர்ச்சில் நீசிலிருந்து தனி இராணுவ விமானம் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டார். [illegible] மணிநேரத்திற்குள் அறுவை சிகிச்சை நடைபெற்றது. அவருடைய உடல்நிலை திருப்திகரமான முறையிலிருக்கிறதென்று டாக்டர்கள் வெளியிட்ட அறிவிப்பு கூறுகிறது.

ஒரு வகுப்பில் 2ம் ஆண்டு படிப்பவர்க்கும் கட்டணச்சலுகை

அரசினர் புதிய உத்தரவு

சென்னை, ஜூலை 1—

உயர்நிலைப் பள்ளிகளின் ஆரம்ப வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் தேர்வு பெறாமல் 2ம் ஆண்டில் படித்தாலும் கட்டணச் சலுகை அளிக்கும்படி 1957ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

தற்போது சலுகைக்குத் தகுதியுள்ள பிள்ளைகள் உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு முடியவும் உயர்நிலைப் பள்ளிகளில் புதிய ஆறாம் வகுப்பு முதல் 10 வகுப்பு முடியும் மட்டும் அதே வகுப்பில் 2ம் ஆண்டு படிக்க சேர்ந்தாலும் கட்டணச் சலுகை அளிக்கப்படலாம் என்று புதிய உத்தரவை அரசினர் பிறப்பித்திருக்கின்றனர்.

மைசூர் அமைச்சரவை விரிகிறது

15 பேர் அமைச்சர்கள்

பெங்களூர், ஜூலை, 1—

மைசூர் மாநில முதலமைச்சர் நிஜலிங்கப்பா மேலும் 5 புதிய அமைச்சர்களைச் சேர்த்து அமைச்சரவையை விரிவுபடுத்தியுள்ளார். இனி மைசூர் அமைச்சர்கள் எண்ணிக்கை 15 ஆகும்.

தனக்கு முன்பு முதலமைச்சராக இருந்த பி. டி. ஜட்டியையும் தன் அமைச்சரவையில் நிஜலிங்கப்பா சேர்த்துக்கொண்டார் மற்றும் நாராயண கவுட (கோலார்) ராமகிருஷ்ண ஹெக்டே கே புட்டுசாமி தேவராஜ உர்ஸ் ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுகர்னோவைக் கொல்ல வெளியார் தலையீடு

இந்தோனேஷ்யப் போலீசார் அறிவிப்பு

சிங்கப்பூர், ஜூலை, 1—

இந்தோனேஷ்ய குடியரசுத் தலைவர் சுகர்னோவைக் கொல்ல நடந்த முயற்சியில் வெளியார் தலையீடுகளும் இருந்திருக்கின்றனவென்று இந்தோனேஷ்யப் போலீசார் நேற்றைக்கு முன்னாள் அறிவித்துள்ளனர்.

இதற்கு எழுத்து ஆயுதம் போன்ற சான்றுகளுமிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்டோசுவிர்சோ தலைமையிலமைந்துள்ள முஸ்லிம்மதவெறிக் கட்சியான தாருல் இஸ்லாம் இயக்கத்திற்கு இக்கொலை முயற்சியில் நெருங்கிய தொடர்புள்ளதாகவும் விசாரணை விரைவில் நடைபெறுமென்றும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

ஜாகர்த்தா வானொலி இந்த அறிவிப்பை ஒலிபரப்பியது.

முஸ்லிம் கூட்டத்திலிருந்து பத்திரிகை புகைப்படக்காரர்கள் விரட்டப்பட்டனர்

புகைப்படம் பிடித்துக்கொள்வது இஸ்லாமிய மதத்துக்கு விரோதமாம்

மத வெறியர்களின் விசித்திரப் போக்கு

கராச்சி ஜூலை 1—

புகைப்படம் பிடித்துக்கொள்வது இஸ்லாம் மதத்துக்கு விரோதமென்று முஸ்லிம் மதகுருக்கள் கூறத் தொடங்கிவிட்டனர். இத்தகைய மூடமத கொள்கையால் பத்திரிகைப் புகைப்படக்காரர்கள் முஸ்லிம் பக்தர்கள் கூட்டமொன்றிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர்.

சில புகைப்படக்காரர்கள் தங்கள் கடமையைச் செய்வதைத் தடுத்தால் பலாத்காரம் செய்வோம் என்று அச்சுறுத்திப் பார்த்தனர். ஆனால் மதபக்தர்களோ அதைக் கண்டு அஞ்சவில்லை.

அரசியலிலேயே மதவெறியராகிய அரசியல் கட்சியொன்று பாகிஸ்தானில் இருப்பதாகத் தெரிகிறது. நிஜாமி இஸ்லாம் என்பது அதன் பெயராகும். இந்தக் கட்சியின் கூட்டம் நேற்றைக்குமுன்னாள் இரவு லாகூரில் நடைபெற்றது. வழக்கம்போல் பத்திரிகையாளரும் வந்திருந்தனர்.

மவுலானா குலாம்கவுஸ் என்பவர் பேசும்போது பத்திரிகைப் புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் படம் பிடித்ததால் கிளிக் என்ற ஒலி கேட்டதாம். உடனே மேடையில் பேசிக்கொண்டிருந்த மவுலானாகுலாம் கவுஸ் கூச்சலிட ஆரம்பித்தார். "என்னை அவமதித்துவிட்டார்" என்று கத்தினார். கூட்டத்தில் பரபரப்பேற்பட்டது. தொண்டர்கள் திரண்டனர். பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளர்களையெல்லாம் பலவந்தமாக விரட்டிக்கொண்டுபோய் வெளியில் விட்டனர்.

புகைப்படம் பிடித்துக்கொள்வது இஸ்லாமிய தருமத்துக்கு விரோதமாகும் என்று உலேமா போகுவர் என்பவர் கூறினார்.

இட்லி கலவை மாவு தயாரிப்பு

சுலபமாக இட்லி தயாரிக்க வசதி

மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகக் கண்டுபிடிப்பு

சென்னை, ஜூலை. 1—

இட்டிலி மாவுக்கு அளவோடு கலந்த கலவையொன்றை மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகம் கண்டுபிடித்துள்ளது.

தமிழகத்தில் பெயர்போன இட்டிலி இந்தியாவெங்கும் விரும்பப்பட்டு வருவதைக் கண்ட மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகம் பல ஆராய்ச்சிகளுக்குப் பின் அரிசி உளுந்தம் பருப்பு அரவை மாவு அளவோடு கலந்த கலவையைக் கண்டு பிடித்தது. இம்மாவு நான்காண்டுகளாக உபயோகத்திலிருந்து வந்தது, இதையொட்டி நல்ல தர நிர்ணயம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. சென்னை இந்திய தர நிர்ணய அலுவலகத்தில் இதன் நகல் கிடைக்கும்.

தென்னாட்டைப் போல் வடநாட்டில் அரிசி, உளுந்து அரைப்பதற்கு ஆட்டுக்கல் கிடைப்பதில்லையாதலால் இந்த இட்லி கலவை மாவு தேவை ஏற்பட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் கடிதங்கள் டெல்வரி

தபால் இலாகாவே செய்யும்

சென்னை, ஜூன் 30—

ஜூலை 1ந்தேதிமுதல்கோவை, ஈரோடு, மதுரை, மாயூரம், உதகை, புதுவை, சேலம், திருச்சி, தூத்துக்குடி வேலூர் ஆகிய நகரங்களில் எக்ஸ்பிரஸ் டெலிவரி என்றும் துரித பட்டுவாடாக் கடிதங்களை பட்டுவாடா செய்யும் தபால் இலாகாவே பொறுப்பேற்கும். சென்னையில் இப்படியே நடத்தப்படுகிறது. இதற்குமுன் தந்தி இலாகா இப்பொறுப்பை ஏற்றிருந்தது.

தமிழக அரசின் 1962-63ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம்

ரூ. 9·51 கோடி பற்றாக்குறை ஈடு செய்ய ரூ. 7·15 கோடிக்கு வரிகள் உயர்வு

நஞ்சை நிலவரி, நீர்ப்பாசன வரி, ஸ்டாம்பு வரி பஸ், லாரிகள், மின்விசை, குதிரைப்பந்தய வரிகள் உயரும்

அசெம்பிளியில் நிதி அமைச்சர் பக்தவத்சலம் கொண்டு வந்தார்

பஸ்கட்டணம்உயராதென மந்திரி ஆர். வி. மேல்சபையில் அறிவிப்பு

சென்னை ஜூலை 1—

நேற்று முற்பகல் அசெம்பிளிகூடியதும் நிதிஅமைச்சர் திரு எம் பக்தவத்சலம் ரூ 9½ கோடி பற்றாக்குறையுள்ள 1962-63ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார்.

ரூ 7·15 கோடிக்கு வரிஉயர்வுகளையும் அறிவித்தார் அதன் பிறகும் ரூ 2·58 கோடி பற்றாக்குறை இருக்கிறது.

உத்தேசவரிகள்

பஸ்கள் லாரிகள் போக்கு வரத்து வண்டிகள்மீது தற்போது உள்ள வரிவிகிதங்கள் அதிகரிக்கப்படுவதன் மூலம் ரூ. 2 கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மின்விசை உபயோகத்துக்கு யூனிட்டுக்கு 3 காசுகள் வரி உயர்வுமூலம் ரூ. 2·5 கோடி கிடைக்கக்கூடும்.

ஸ்டாம்புக் கட்டணங்கள் 50 சதவிகிதம் உயர்த்தப்படுகிறது இதன் மூலம் ரூ 1 கோடி கிடைக்கலாம்.

நஞ்சை நிலத்தீர்வை நீர்ப்பாசனத்தீர்வை அதிகரிக்கப்படும் இதன்மூலம் 1·3 கோடி ரூபாய் அதிகவருமானம் கிடைக்கும்.

கார்ப்புறலேலங்கள்மீது வரிவிதிப்பதால் 25 லட்சரூபாய் எதிர்பார்க்கலாம்.

குதிரைப்பந்தயவரிகள் இரட்டிப்பாக்கப்படும், இதன்மூலம் ரூ 24 லட்சம் கிடைக்கும்.

கரும்புக்கு செஸ்வரி மூலம் ரூ 50 லட்சம் வருமான உயர்வு கிடைக்கும்.

பட்ஜெட்டை வெளியிட்டு அமைச்சர் திரு பக்தவத்சலம் பேசுகையில், நமது சமூகத்தில் பொருளாதார நிலையில்பின்தங்கியுள்ள மக்கள் தற்போது தான் தலையெடுக்கத் துவங்கியுள்ளனர் அவர்களுடைய நல்வாழ்விற்கான வழிகளில அறிகுறிகளும் காண்கிறோம் பின் தங்கியவரை முற்போக்கடையச் செய்வதற்கே அதிகம் நாம் செலவிடவேண்டியிருக்கிறது கல்வி மருத்துவ வசதி சுகாதாரம் கிராமஅபிவிருத்திஆகியவேலைகளை நமது அபிவிருத்தித் திட்டம் மூலம் நிறைவேற்றக்கடமைப்பட்டிருக்கிறோம் இதற்கு அதிக நிதி ஆதாரங்களைத் தேடியாகவேண்டியுள்ளது மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவும் ஷேமலாபம் பெருகவும் ஆன காரியங்களைப் புறக்கணிக்கமுடியாது அதற்கான திட்டங்களைத்தீட்டி அதனபடி ஆதாரங்களைப் பெருக்கி நிறைவேற்றவேண்டும் என்று கூறி முதல் இரண்டு திட்டங்களின் அடைந்த முன்னேற்றங்களைவிளக்கினார்.

கல்வி வளர்ச்சிக்கு ரூ. 25 கோடி

மேலும் பேசியதாவது:—

கல்வி வசதிகள் பெருக்கப்பட்டால்மட்டும் போதாது எல்லோருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம் எனவே இலவசக்கல்விச் சலுகைக்கான பெற்றோர் வருமான உச்சவரம்பு ரூ. 1200 என்பதை ரூ 1500 ஆக உயர்த்தப்படும் தற்போது உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. கல்வி வளர்ச்சிக்காக ஆண்டுக்கு ரூ 25 கோடி செலவிடுகிறோம்,

ஆக்கவேலைகள் பன் மடங்கு அதிகரித்திருப்பதன் பயனாக நிதி பற்றாக்குறை அதிகரிக்கிறது இதற்காக திட்டவேலைகளை நிறுத்தமுடியாது. குறைக்கவும் முடியாது, நிதி வசதிகளைப் பெருக்கவேண்டும்.

இரண்டாம் திட்ட ஆரம்பத்தில் ரூ 50 கோடி ரூபாய்செலவு மிக்கப்பட்டது திட்டவேலைகளுக்காக 1962-63 ல் ரூ 57 கோடி செலவிடப்படவேண்டியுள்ளது. மூன்றாம்திட்டத்துக்கு ரூ 291 கோடி தேவைப்படுகிறது

சம்பளக்கமிஷன் சிபார்சுப்படி அரசு ஊழியர்களுக்கு சம்பளங்கள் வெகுவாக உயர்த்தப்பட்டுள்ளது அகவிலைப்படியை மத்திய அரசு ஊழியர்களுக்கு ஒப்ப அளிக்க முடியவில்லை தற்போது அவர்களுக்குமேலும் உயர்த்தப்பட்டிருக்கிறது எனவே ரூ 150 க்கு குறைவானசம்பளக்காரர்களுக்கு ரூ 5 விதம் உயர்த்தப்படும் ஜூலை 1முதல் அளிக்கப்படும் அதற்கு ரூ 1 7 கோடி செலவாகும் நிதி வசதியைப் பொறுத்து ரூ 150 க்குமேற்பட்ட சம்பளக்காரர்களுக்கும் அளிக்க யோசிக்கப்படும்.

ரூ 9.51 கோடி பற்றாக்குறை

1962-63 ஆண்டில் ரிவினியூ எதிர்பார்பது ரூ 106 50 கோடி; எதிர்பார்க்கும செலவோ ரூ 116.01 கோடி; ரூ. 9 51 பற்றாக் குறையை ஈடுசெய்ய சில வரிகளை உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது கல்விச் செலவும் ரூ 25.18 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது மதிய உணவுத் திட்டத்துக்கு ரூ 1.35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 168 புதிய வேலைத் திட்டங்களுக்கும் புதிதாக ஏழு பாசனத்திட்டங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவு தானிய உற்பத்தி 38 லட்சம் டன்னிலிருந்து 2-ம் திட்டத்தில் இரசாயன உரம் பற்றாக்குறை இருந்தும் 44 லட்சம் டன்களாக உயர்த்தியுள்ளோம். நமது 3-ம் திட்ட லட்சியம் 70 லட்சம் டன்கள் நீர்ப்பாசனம், நில அபிவிருத்தி, உரம் விநியோகம், பொறுக்குவிதை விநியோகம் போன்ற வழிகளில் லட்சிய எல்லையை அடையவேண்டும்.

புதிய விவசாயக்கருவிகளையும் வழங்கத் திட்டம் வைத்திருக்கிறோம். 14 புல்டோசர்கள் தருவிக்க ஏற்பாடு உள்ளது. 22875 புதிய கலப்பைகள் கடந்த ஆண்டில் வழங்கப்பட்டன. இவ்வாண்டு ஒரு லட்சத்து நாற்பதாயிரம் கருவிகள் வழங்கப்படும்.

வியாபாரப்பயிர்களைப் பெருக்கவும் எண்ணெய் வித்துக்களைப் பெருக்கவும் செய்ய தெ. ஆ. மாவட்டத்தில் தீவிரத் திட்டம் உள்ளது.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

பாசன வசதிகளைப் பெருக்கி 262 லட்சம் ஏக்கர் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட மூலம் இரண்டு மாதங்களில் பொள்ளாச்சி பகுதியில் 10000 ஏக்கர் பாசனத்துக்குவரும் இத்திட்டத்துக்கு 453 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது 7 நடுத்தர புதிய பாசனத் திட்டங்களுக்கு திட்டக்கமிஷன் அனுமதி கோரப்பட்டுள்ளது சிறியபாசனத்திட்டங்கள் ஊற்று நீர் குழாய் கிணறுகள் 500 தோண்ட ரூ 94 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது ரூ 6000 டனும 10 1 மான்யமும் தரப்படும 400 வடிமுனைக கிணறுகளுக்கும திட்டமிட்டிருக்கிறோம்.

காடு வளர்ப்பு

4 லட்சம் ஏக்கரில் காடுகள் வளர்ப்புத்திட்டம் நிறைவேற்ற ரூ 2·12 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது வடக்குமாவட்டங்களில் 2000 ஏக்கர்களில் விறகு மரம் வளர்க்கப்படும் காகிதம் தோல் பதனிடும் தொழில்களுக்கான மரங்கள் கற்பூரமரங்கள்வாட்டில் போன்ற பலவகை பயனுள்ள மரங்கள் வளர்க்க 20000 ஏக்கர் நிலகிரி பழனி மலைகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன் தொழில் அபிவிருத்தி ரூ 11 லட்சத்தில் மீன் காட்சிசாலை

மீன் தொழில் வளர்ச்சிக்குவேண்டிய உதவி அளிக்கப்படுகிறது 70 இயந்திரப் படகுகள் கட்டப்படும் சென்னை நகரில் ரூ 11 லட்சம் செலவில் மீன்காட்சிசாலை அமைக்கப்படும் வலைகளுக்கு 28 000ராத்தல் நைலான் நூல் வழங்கப்பட்டுள்ளது மீன்பிடி துறைமுகங்கள் கட்டப்படுகின்றன.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

விவசாய அபிவிருத்திக்கு கூட்டுறவுத்துறைமூலம் கடன் அளிக்கப்படுகிறது. மிக ஏழைகளுக்கு கடன் வழங்கி வசூலாகாத நிலுவைக்கு உத்தரவாதமான நிதி 80 லட்சத்துடன் அமைக்க உத்தேசம். முதல் படியாக ரூ 22 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சாகுபடிப் பண்ணைகள் 9; கூட்டுப்பண்ணைகள் 5 நிறுவ முயற்சி நடக்கிறது.

தொழில் முயற்சி

தனியார் துறையில் தொழில்கள் ஆரம்பிக்க உதவப்படுகிறது காகிதம் செயற்கைப்பட்டு அலுமினியம் ரசாயனஉப்புத்தொழில்கள் முதலியனவும் 8 சர்க்கரை ஆலைகளுக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது தொழில்கள் ஆரம்பித்து நடத்துவதற்கு ஜாமீன்மேல் அளிக்கப்படும் [illegible] களில் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது

1962-63-ம் ஆண்டு பட்ஜெட் கண்ணோட்டம்

(ரூபாய் லட்சக்கணக்கில்)

	1961—62-ல்	1962—63 புதிய திட்டம்.
மொத்த வருமானம்	89 கோடி 69 லட்சம்,	113 கோடி 15 லட்சம்
மொத்த செலவு	96 கோடி 06 லட்சம்.	116 கோடி 01 லட்சம்
பற்றாக்குறை	6 கோடி 37 லட்சம்.	2 கோடி 86 லட்சம்

அண்ணாமலைப் பல்கலைக்கழக விவசாய எஞ்சினீயரிங் பிரிவு

மாணவர் தேர்வுக்கான குழு நியமனம்

அண்ணாமலைநகர் ஜூன் 30—

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் நான்காண்டு விவசாய எஞ்சினியரிங் பட்டப்படிப்புக்கான பிரிவுக்கு மாணவர்களைத் தேர்வுசெய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அக்குழுவின் தலைவராக திரு பி. டி. ராஜன இருப்பார். டாக்டர் சே ரெங்கசாமி அய்யர் டாக்டர் ஜி ரெங்கசாமி ஆகியோர் உறுப்பினர். மொத்தம் 75 இடங்கள் உள்ள இதற்கு 540 மனுக்கள் வந்திருப்பதாகவும் அவர்களில் 235 பேர் பேட்டிக்கு அழைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

பெரியார் சுற்றுப்பயணம்

ஜூலை மாதம்

4 காலை: புலவஞ்சி (பட்டுக்கோட்டை வட்டம்) திருமணம்
மாலை: வடுவூர் (மன்னார்குடி வட்டம்)
5 கீழப்பட்டு ”
6 கீரனூர் (நன்னிலம் வட்டம்)
8 காலை: மதுராந்தகம் (திருமணம்)
9 காலை: சோழபுரம் (திருமணம்)
மாலை: அய்யாவாடி
23 பாபநாசம் திருமணம்

ரூ. 150-க்குள் சம்பளம் பெறும் அரசு ஊழியர்களுக்கு மாதம் ரூ. 5 கிராக்கிப்படி உயர்வு

ஆசிரியர்களும் ஸ்தல ஸ்தாபன ஊழியர்களும் பெறுவர்

இதன்மூலம் சர்க்காருக்கு 26 கோடி அதிகச் செலவு

சென்னை ஜூலை 1—

நேற்று தமிழக அரசின் 1962—63ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை சட்ட மன்றத்தில் கொண்டுவந்த நிதி அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ரூ 150க்குக் குறைவாகப் பெறும் எல்லா அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்கள் ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி ரூ 10 உடன் ரூ 5 வீதம் சேர்த்து ஜூலை 1ந்தேதி முதல் அளிக்க உத்தேசித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

எல்லா ஸ்தலஸ்தாபனங்களும் மேற்கண்டபடி கிராக்கிப்படி உயர்த்தும்படியும் அதிகப்படி செலவாகும் தொகை மான்யமாக அளிக்கப்படும் என்றும் அரசினரால் அவைகளுக்கு அறிவிப்புச் செய்யப்படும் என்றார் கிராக்கிப்படி அதிகரிக்கும் வகையில் சர்க்காருக்கு ஒரு ஆண்டுக்கு 26 கோடி அதிகச் செலவு பிடிக்கும் என்றார் புதிய கிராக்கிப்படி உயர்வு ஆகஸ்டு முதல் தேதி வாங்கும் சம்பளத்துடன் தரப்படும் என்றார் பெரியசம்பளக்காரர்களுக்கு இந்நிலைமையைப் பொறுத்து பின்னர் யோசிக்கப்படும் என்றார்,

---

அண்ணாமலைப் பல்கலைக்கழக எஞ்சினியரிங்தேர்வுக்குழு

நேற்று அலுவலைத் துவக்கியது

அண்ணாமலைநகர், ஜூலை; 1—

எஞ்சினியரிங் தொழில் நுணுக்கப்படிப்புக்கான மாணவர்கள் தேர்வுக்காக அண்ணாமலைப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் வி. சுப்ரமணியம், எஞ்சினியரிங் தொழில்நுணுக்கப்பள்ளி முதல்வர் எஸ், பால இயந்திர-எஞ்சினியரிங் பேராசிரியர் ராஜாராம் ஆகிய மூவர் கொண்ட கமிட்டி நேற்று இந்த அலுவலைத்துவங்கியது.

பீகார் அமைச்சரவை விரிவடைந்தது

மேலும் 2 பேர் நியமனம்

பாட்னா ஜூலை 1—

பீகார் அமைச்சரவை விரிவாக்கப்பட்டுள்ளது கிருஷ்ண வல்லப சாகே என்பவரும் சாமுசாரன் டுபே என்பவரும் நேற்றைக்கு முன்னாள் காலை கவர்னர், அனந்தசயனம் அய்யங்கார் முன்பு விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டு அமைச்சரவையில் சேர்ந்தனர்.

சாகே என்பவர் 1946—1957 அமைச்சரவையில் அமைச்சராயிருந்தவர் டுபேஎன்பவர் முன்பு உதவி யமைச்சராயிருந்து தற்பொழுது அமைச்சராக உயர்வு பெற்றுள்ளார்.

அமைச்சர்கள் எண்ணிக்கை 9 லிருந்து 11 ஆக உயர்ந்திருக்கிறது.

மன்னரின் அரண்மனை மியூசியமாயிற்று

ம. பி. கவர்னர் தகவல்

குவாலியர், ஜூலை. 1—

சிந்தியா மன்னரின் 'ஜெய விலாஸ்', என்ற அரண்மனை பொதுமக்களுக்குக் காட்சிசாலை [மியூசியம்] யாக்கப்பட்டுவிட்டது.

காலஞ்சென்ற சிந்தியா மன்னர் ஜீவாஜிராவ் அந்த அரண்மனை பொதுமக்கள்வந்துகாணும் காட்சிசாலையாக மாற்றப்படவேண்டுமென்று விரும்பியிருந்தாராம் மன்னரின் விருப்பத்தை ராணி நிறைவேற்றிவைத்துவிட்டார்.

காலஞ்சென்ற சிந்தியா மன்னரின் சிரார்த்தினக் கொண்டாட்டங்களை மத்தியபிரதேச கவர்னர் படாஸ்கர் துவக்கிவைக்கையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.